**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110228

1. District : மாவட்டம் Nilgiris    PS: காவல்நிலையம் V & AC    Year: ஆண்டு 2021    FIR No.: மு.த.அ. எண் 03/21    Date: நாள் 01.10.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption    Sections பிரிவுகள்: 7, 7(A)
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Cr. P. C    Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை prior to 16.45 hrs on 30.10.2021
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021    Time : நேரம் 11.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —    Time : நேரம் —

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Joint-II Sub-Registrar office, Udhagamandal-am The Nilgiris about 1½ km Northwest.
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் H. Prakash    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம் —    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் PA to Sub-Collector, Coonoor.    (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) R. செந்தில் குமார், Assistant, i/c, Joint-II Sub-Registrar, 2) S. சந்திரன், Junior Asst. 3) K. கருப்புசாமி (PI), மொரடகொம்பை, 4) M. சீனிவாசன் (PI), மருத்துவமனை சாலை, 5) N. Rajkumar (PI), தேநாடுகம்பை 6) R. குமார் (PI), நஞ்சநாடு, 7) R. செந்தில் குமார் (PI), 8. மணிஹட்டி 9) B. ரமேஷ் (PI) எசஹட்டி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 1/10/21
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court 01.10.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் M.SUBASHINI.
Rank நிலை DSP No. எண் .........

**ஊ.த.க.பிரிவு கு.எண்.3/2021/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:-**

**கனம் உதவி அமர்வு நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

இன்று 01.10.2021 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் திருமதி.M.சுபாஷிணி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகம், குன்னூர் சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு) மாவட்ட ஆய்வு குழு அலுவலர் திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.H.பிரகாஷ், குன்னூர் சார் ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர், சார் ஆட்சியர் அலுவலகம், குன்னூர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர் பொருள்: திடீர் சோதனை - நடவடிக்கை கோருதல் - சம்மந்தமாக. நேற்று 30.09.2021-ம் தேதி நீலகிரி மாவட்ட ஆட்சியர் எனக்கு அளித்த உத்தரவின் படி உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினர், உதகமண்டலம் 2-இணை சார்பதிவாளர் அலுவலர்களும், ஊழியர்களும் பத்திரப்பதிவு, திருமண பதிவு மற்றும் சார்பதிவாளர் தொடர்பான பணிகளுக்கு வரும் பொதுமக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் உதகமண்டலம் 2-இணை சார்பதிவாளர் அலுவலகத்தை நேற்று (30.09.2021) 16.45 மணிமுதல் 20.30 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். இந்த திடீர் தணிக்கையின் போது தகுந்த முகாந்திரம் சொல்லாத பணம் ரூ.78,495/-ஐ அங்கிருந்த 1) திரு.R.செந்தில்குமார், உதவியாளர், 2-இணை சார்பதிவாளர் (பொறுப்பு), 2) திரு.S.சந்திரன், இளநிலை உதவியாளர் மற்றும் 3) திரு.கருப்புசாமி, மொரடகோம்பை, 4) திரு.M.சீனிவாசன், வழக்குரைஞர், 5) திரு.N.ராஜ்குமார், Relationship Officer, கரூர் வைஸ்யா வங்கி, 6) திரு.R.குமார், தங்காடு, 7) திரு.R.செந்தில்குமார், B.மணியட்டி, 8) திரு.B.ரமேஷ், ஒசஹட்டி ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இந்த திடீர்

DSP 1/10/21.

சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணத்திற்குண்டான விளக்கத்தினை மேற்படி நபர்கள் முறைப்படி அளிக்காததால், பணம் மொத்தமாக ரூ.78,495/- (ரூபாய் எழுபத்தெட்டாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) மற்றும் உதகமண்டலம் 2-இணை சார்பதிவாளர் (பொறுப்பு) அவர்களின் சான்றொப்பமிட்ட கீழ்கண்ட ஆவணங்களின் நகல்கள் 1) தொகுதி எண்.42 வருகைப்பதிவேடு (பக்கங்கள் 1 முதல் 8 வரை ), 2) தொகுதி எண்-02 வருகை பதிவேடு (பக்கங்கள் 1 முதல் 6 வரை), 3) தனி நபர் பணப்பதிவேடு (பக்கங்கள் 1 முதல் 6 வரை), 4) 'அ' கணக்கு பதிவேடு (இரண்டு பக்கங்கள்), 5) 'D' கணக்கு பதிவேடு (இரண்டு பக்கங்கள்), 6) Section 41 Account (இரண்டு பக்கங்கள்), 7) I.P. Camera/CD Account (இரண்டு பக்கங்கள்), 8) உட்பிரிவு கணக்கு பதிவேடு (இரண்டு பக்கங்கள்), 9) 'H' கணக்கு பதிவேடு (இரண்டு பக்கங்கள்) ஆகியவையும், நேற்று (30.09.2021) 2-இணை சார்பதிவாளர் பதிவான கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களான 1) Doc.No806/2021 (பக்கங்கள் 1 முதல் 9 வரை), 2) Doc.No807/2021 (பக்கங்கள் 1 முதல் 18 வரை), 3) Doc.No808/2021 (பக்கங்கள் 1 முதல் 18 வரை), 4) Doc.No809/2021 (பக்கங்கள் 1 முதல் 16 வரை), 5) Doc.No810/2021 (பக்கங்கள் 1 முதல் 16 வரை), 6) Doc.No811/2021 (பக்கங்கள் 1 முதல் 15 வரை), 7) Doc.No812/2021 (பக்கங்கள் 1 முதல் 15 வரை), 8) Doc.No813/2021 (பக்கங்கள் 1 முதல் 14 வரை), 9) Doc.No814/2021 (பக்கங்கள் 1 முதல் 11 வரை) ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அப்போது இந்த திடீர் சோதனையின் போது செயல்முறை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த செயல்முறையினையும், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.78,495/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். திரு.R.செந்தில்குமார், உதவியாளர், 2-இணை சார்பதிவாளர் (பொறுப்பு), திரு.S.சந்திரன், இளநிலை உதவியாளர் மற்றும் திரு.கருப்புசாமி, மொரடகோம்பை, திரு.M.சீனிவாசன், வழக்குரைஞர், திரு.N.ராஜ்குமார், Relationship Officer, கரூர் வைஸ்யா வங்கி, திரு.R.குமார், தங்காடு, திரு.R.செந்தில்குமார், B.மணியட்டி, திரு.B.ரமேஷ், ஒசஹட்டி ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம். H.பிரகாஷ் 01.10.2021. Submitted, Received the above typed complaint

DSP 1/10/21.

on 01.10.2021 at 11.00 hrs and registered a case in The Nilgiris Detachment Cr.No.3/2021/AC/NI u/s 102 Cr.PC r/w 7, 7(A) of PC Act 1988 amended as PC (Amendment) Act 2018. ஒப்பம் M.Subashini 01-10-2021 Deputy Supdt. of Police, Vigilance and Anti - Corruption, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: **Proceedings of the Surprise Check conducted on 30.09.2021 between 16.45 hrs and 20.30 hrs at Office of the Joint - II Sub Registrar, Udhagamandalam, the Nilgiris District.** முன்னிலை: 1) திரு.H.பிரகாஷ், குன்னூர் சார் ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர், சார் ஆட்சியர் அலுவலகம், குன்னூர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.M.சுபாஷிணி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 30.09.2021-ஆம் தேதி நீலகிரி மாவட்டம், குன்னூர், சார் ஆட்சியர் அலுவலகம், சார் ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர், திரு.H.பிரகாஷ், ஆகிய நான் நீலகிரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் பொறுப்பில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவுப்படி பணியை பார்த்து வந்தபோது இன்று (30.09.2021) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள 2-இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சார்பதிவாளர் மற்றும் அலுவலர்கள் பத்திரப்பதிவு, திருமண பதிவு மற்றும் சார்பதிவாளர் அலுவலகம் சம்மந்தப்பட்ட பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக காவல் துணை கண்காணிப்பாளர் திருமதி.M.சுபாஷிணி மற்றும் காவல் குழுவினருடன், உதகமண்டலம் தாலுகா அலுவலக வளாகத்தில் மேற்கு பாத்தவாறு அமைந்துள்ள 2-இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்யப்பட்டது. திடீர் சோதனையானது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், தாலுகா அலுவலக வளாகத்தில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ள 2-இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் நுழைந்தபோது முதலில் ஒரு வரந்தா உள்ளது அதற்கு அடுத்தபடியாக இருந்த அறையில் நுழைந்தவுடன் வடக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த பின்னர் பெயர் மற்றும் பதவி கேட்டுத்தெரிந்த திரு.R.செந்தில்குமார், உதவியாளர், 2-இணை சார்பதிவாளர் (பொறுப்பு) என்பவர் அமர்ந்திருந்தார். அவரிடம் அறிமுகம்

DSP 1/10/21.

செய்துகொண்டு, அனைவரும் சுய பரிசோதனை செய்து யாரிடமும் பணம் ஏதுமில்லையென்பதை தெரிவித்துக்கொண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவரை விசாரிக்க தான் உதவியாளர் என்றும் கடந்த இரண்டு வருடங்களாக 2-இணை சார்பதிவாளர் பொறுப்பில் இருப்பதாகவும் கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தான் அணிந்திருந்த பேண்ட்டின் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.4,600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் ரூ.1,100/- இன்று அவருடைய செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாகவும், அவர் எடுத்துவந்த அந்த பணத்திற்கான விவரத்தை தொகுதி எண் தனிநபர் பணப்பதிவேடு (ஆரம்பம் 04.01.2021) என்ற பதிவேட்டில் குறிப்பிட்டிருந்ததாகவும் கூறி அந்த பதிவேட்டை ஆஜர் செய்தார். அந்த பணம் ரூ.1,100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமிருந்த பணம் ரூ.3,500/-ஐ பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததாலும், முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறியதாலும், அந்த பணம் பொதுமக்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக 2-இணை சார்பதிவாளர் இருக்கைக்கு முன்புறமாக கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த பின்னர் பெயர் மற்றும் பதவி கேட்டுத்தெரிந்த இளநிலை உதவியாளர் திரு.K.ராகுல் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தான் அணிந்திருந்த பேண்டின் பர்ஸிலிருந்து பணம் ரூ.400/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க தனது சொந்த ஊர் அரிக்காரன்வலசு, திருப்பூர் மாவட்டம் என்றும் கைசெலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், விசாரணைக்குப்பிறகு அந்த பணம் ரூ.400/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு முன்புறமாக நின்றிருந்த திரு.கருப்புசாமி, மொரடகொம்பை என்பரை விசாரிக்க, தான் தற்பொழுது இலவச மின்சாரம் பெற வில்லங்கச்சான்று தொடர்பாக சில சந்தேகங்களை கேட்க வந்திருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது சட்டையின் மேல்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.15,170/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க தோட்டத்திற்கு மருந்து வாங்க வைத்திருந்ததாக கூறினார். விசாரணையில் அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படாததால் அந்த பணம் ரூ.15,170/- அவரிடமிருந்து

DSP 1/10/24.

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக அவருக்கு அருகில் திரு.M.சீனிவாசன், என்பவர் நின்றிருந்தார். அவரை விசாரிக்க தான் வழக்குறைஞர் என்றும், உதகமண்டலம் அரசு மருத்துவமனை சாலையில் வழக்குறைஞர் அலுவலகம் நடத்தி வருவதாகவும், மேல்குந்தா கிராம அம்மகல் எஸ்டேட் புகார் தொடர்பாக உதகமண்டலம் மாவட்ட பதிவாளர் அவர்கள் சொன்னதுபடி 2-இணை சார்பதிவாளர் அவர்களை பார்க்க வந்திருந்ததாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.17,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க, அவர் தனது கட்சிக்காரருக்கு முத்திரைத்தாள் வாங்க வைத்திருந்த பணம் என்று கூறினார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படாமல், அந்த பணம் ரூ.17,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக திரு.N.ராஜ்குமார் என்பவரை விசாரிக்க, தான் உதகமண்டலம் கரூர் வைஸ்யா வங்கியில் Relationship officer ஆக கடந்த ஆறு வருடங்களாக இருப்பதாகவும், இன்று தங்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு.குமார் என்பவருக்கு சொந்தமான பத்திரபதிவு ஆவணம் எண்.595/2021-ஐ கரூர் வைஸ்யா வங்கியில் அடமானம் வைத்து வீட்டு கடன் பெற வந்திருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னிடமிருந்த பணம் ரூ.29,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் திரு.குமார் என்பவருக்கு எனது சம்பள பணத்திலிருந்து ஆன்லைன் பதிவிற்காக கொடுத்துள்ளேன். அந்த பணத்தை இன்று (30.09.2021) திரு.குமார் 2-இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்ததாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படாததால் பணம் ரூ.29,000/- வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த திரு.R.குமார் என்பவரை விசாரிக்க தான் கரூர் வைஸ்யா வங்கி பணியாளருடன் வந்திருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.3,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க அவர் செலவு வாங்க வைத்திருந்ததாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படாததால், பணம் ரூ.3,500/- அவரிடமிருந்து வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக அவருக்கு அருகில் நின்றிருந்த R.செந்தில்குமார் என்பவரை விசாரிக்க

DSP 1/10/21.

தான் திரு.R.குமாரின் ஆவணத்திற்காக சாட்சி கையொப்பமிட வந்திருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க அவர் வீட்டு செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படாததால், அந்த பணம் ரூ.5,500/- வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக 2-இணை சார்பதிவாளர் இருக்கைக்கு வலதுபுறமாக மேற்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.S.சந்திரன் என்பவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது சட்டையின் மேல்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.775/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க வீட்டிலிருந்து செலவிற்காக எடுத்து வந்ததாகவும், அவர் எடுத்துவந்த அந்த பணத்திற்கான விவரத்தை தொகுதி எண் தனிநபர் பணப்பதிவேடு (ஆரம்பம் 04.01.2021) என்ற பதிவேட்டில் குறிப்பிட்டிருந்ததாகவும் கூறி அந்த பதிவேட்டை ஆஜர் செய்தார். அதன்படி விசாரணைக்குப்பின் அந்த பணம் ரூ.775/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,325/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க முன்னுக்குப்பின் முரணாகவும், சரியான முகாந்திரம் கூறாததாலும், அந்த பணம் ரூ.1,325/- பொதுமக்களிடம் இருந்து பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக அவரது இருக்கைக்கு அருகில் நின்றிருந்த திரு.B.ரமேஷ் என்பவரை விசாரிக்க தான் வழக்குறைஞர் திரு.ராஜேந்திரன் என்பவரிடம் கிளார்க் ஆக இருப்பதாகவும், வில்லங்கச் சான்று சம்மந்தமாக விளக்கம் கேட்டு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.3,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் தோட்டத்திற்கு மருந்து வாங்க வைத்திருந்ததாக கூறினார். அவருடைய விளக்கம் விசாரணையில் ஏற்றுக்கொள்ளப்படாததால் அந்த பணம் ரூ.3,500/- வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக 2-இணை சார்பதிவாளர் இருக்கைக்கு பின்புறமாக இருந்த கம்ப்யூட்டர் கேபினில் அமர்ந்திருந்த

DSP 1/10/21.

திருமதி.R.மகேஸ்வரி என்பவரை விசாரிக்க, தான் கடந்த ஒரு வருடமாக இந்த அலுவலகத்தில் Data Entry Operator ஆக இருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பர்ஸிலிருந்து பணம் ரூ.250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அது அவருடைய சொந்த பணம் என்றதால், விசாரணைக்கு பிறகு அந்த பணம் ரூ.250/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அந்த அறையிலேயே அமர்ந்திருந்த திரு.S.ராஜ்குமார் என்பவரை விசாரிக்க தான் இந்த அலுவலகத்தில் கடந்த ஒருவருடமாக கேமரா ஆப்பரேட்டராக இருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.260/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதன்பிறகு 2-இணை சார்பதிவாளர் திரு.R.செந்தில்குமார் என்பவரிடம் அலுவலகத்தில் அலுவலக சம்மந்தப்பட்ட பணம் எதாவது உள்ளதா என விசாரிக்க அவர் திரு.சந்திரன் அமர்ந்திருந்த இருக்கைக்கு பின்புறமாக இருந்த அறையில் நுழைந்தவுடன் இடதுபுறமாக ஒரு மரத்தினால் ஆன பெட்டியிலிருந்து தொகுதி எண்.6, சி கணக்கு ஆரம்பம் 09.05.2019 என்ற பதிவேட்டையும், ஒரு சிறிய வெள்ளைநிற துணிப்பையிலிருந்து பணம் ரூ.2,000/- மற்றும் கொடிநாள் ரசீது புத்தகம் (வரிசை எண்.0892501 முதல் 0892600) ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டையும், கொடிநாள் ரசீது புத்தகத்தையும் ஒப்பிட்டு பார்க்க ரூ.2,000/-க்கான இருப்பு சரியாக இருந்ததால், அந்த பதிவேடு, பணம் ரூ.2,000/- மற்றும் ரசீது புத்தகம் ஆகியவை 2-இணை சார்பதிவாளர் திரு.R.செந்தில்குமாரிடமே ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சென்னை அலுவலக குறிப்பாணை எண்.23507/VAC-4/2021, நாள்:27.07.2021-ன்படி சார்பதிவாளர் அலுவலகங்களில் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் பற்றி அங்கிருந்த பதிவேடுகளை ஆய்வு செய்ய, மேற்படி அலுவலகத்தில் குறிப்பாணையில் அறிவுறுத்தியிருந்த பதிவேடுகள் யாவும் சரியாக பராமரிக்கப்படுவதில்லை என தெரியவருகிறது. மேலும் இந்த திடீர் சோதனையின்போது சரியான முகாந்திரம் அளிக்காத பணம் மொத்தமாக

DSP 1/10/21.

ரூ.78,495/- (ரூபாய் எழுபத்தெட்டாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) மற்றும் உதகமண்டலம் 2-இணை சார்பதிவாளர் (பொறுப்பு) அவர்களின் சான்றொப்பமிட்ட கீழ்கண்ட ஆவணங்களின் நகல்கள் 1) தொகுதி எண்.42 வருகைப்பதிவேடு (பக்கங்கள் 1 முதல் 8 வரை ), 2) தொகுதி எண்-02 வருகை பதிவேடு ( பக்கங்கள் 1 முதல் 6 வரை), 3) தனி நபர் பணப்பதிவேடு (பக்கங்கள் 1 முதல் 6 வரை), 4) 'அ' கணக்கு பதிவேடு (இரண்டு பக்கங்கள்), 5) 'D' கணக்கு பதிவேடு (இரண்டு பக்கங்கள்), 6) Section 41 Account (இரண்டு பக்கங்கள்), 7) I.P. Camera/CD Account (இரண்டு பக்கங்கள்), 8) உட்பிரிவு கணக்கு பதிவேடு (இரண்டு பக்கங்கள்), 9) 'H' கணக்கு பதிவேடு (இரண்டு பக்கங்கள்) ஆகியவையும், இன்று (30.09.2021) இவ்வலுவலகத்தில் பதிவான கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களான 1) Doc.No806/2021 (பக்கங்கள் 1 முதல் 9 வரை), 2) Doc.No807/2021 (பக்கங்கள் 1 முதல் 18 வரை), 3) Doc.No808/2021 (பக்கங்கள் 1 முதல் 18 வரை), 4) Doc.No809/2021 (பக்கங்கள் 1 முதல் 16 வரை), 5) Doc.No810/2021 (பக்கங்கள் 1 முதல் 16 வரை), 6) Doc.No811/2021 (பக்கங்கள் 1 முதல் 15 வரை), 7) Doc.No812/2021 (பக்கங்கள் 1 முதல் 15 வரை), 8) Doc.No813/2021 (பக்கங்கள் 1 முதல் 14 வரை), 9) Doc.No814/2021 (பக்கங்கள் 1 முதல் 11 வரை) ஆகியவையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது 2-இணை சார்பதிவாளர் அலுவலக ஊழியர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் சோதனையானது இன்று 30.09.2021 ஆம் தேதி 16.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறையில் 1) திரு.H.பிரகாஷ், குன்னூர் சார் ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர், சார் ஆட்சியர் அலுவலகம், குன்னூர், நீலகிரி மாவட்டம், 2) நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திருமதி.M.சுபாஷிணி, 3) உதகமண்டலம் 2-இணை சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.செந்தில்குமார், 4) வழக்குறைஞர் திரு.M.சீனிவாசன், 5) K.கருப்புசாமி, மொரடகொம்பை, 6) திரு.R.குமார், தங்காடு கிராமம், 7) திரு.R.செந்தில்குமார், B.மணியட்டி, 8) திரு.N.ராஜ்குமார், குந்தசப்பை, 9) திரு.B.ரமேஷ், ஒசஹட்டி, 10) S.சந்திரன், இளநிலை உதவியாளர் ஆகியோர் கையொப்பம்

DSP 1/10/21.

செய்தனர். இந்த திடீர் தணிக்கை செயல்முறையானது தலைமைகாவலர் திரு.நா.சக்தி என்பவர் கணினியில் தட்டச்சு செய்தார். நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 01.10.2021-ம் தேதி காலை 11.00 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2021/AC/NI சட்ட பிரிவு 102 Cr.PC r/w Sec 7, 7(A) of PC Act 1988 Amended as PC (Amendment) Act, 2018-ன் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.78,495/- (ரூபாய் எழுபத்தி எட்டாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) ஆகியவற்றை கணம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு சமர்பித்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

DSP 1/10/21.

(M.SUBASHINI).